


# மக்கள் மன்றம்


மலர் 6 | கார்த்திகை - மார்கழி - 1994-95 | இதழ் 7,8


## புத்தாண்டில் ஓர் புதுக்குடியிருப்பு

# செலவிப் நகர் - முள்ளில் மலர்ந்த மலர்


1995-ஆம் ஆண்டை குடும்ப ஆண்டென்றும், நல்லிணக்க ஆண்டென்றும் உலகோர் வரையறுத்து உள்ளனர். எல்லா குடும்பங்களும் சிறப்புற வாழ, உறங்கி, உறவாடி மகிழ, தற்பாதுகாப்புடனும், தன்மானத்துடனும் வாழ ஓர் வீடு தேவை. அந்த வீட்டில் மனைவி மக்களுடன் வாழும் போது வீடு குடும்பமாகிறது. ஒரு குடியிருப்பில் வாழும் குடும்பங்களிடையே, உறவும், நட்பும், நல்லிணக்கமும் நிலவும்போது, கிராமிய வாழ்வு ஒரு ரம்மியமான வாழ்வாக மாறுகிறது. அண்டை அயலார்களுடன், இணைந்து வாழும் வாழ்க்கை மனித நாகரிகத்திற்கும் அடித்தளம் போடுகிறது. அப்படி மானிட ஒற்றுமையுடன், சர்வதேச சகோதரத்துவத்துடன், பல்லினங்களிடையே நல்லிணக்கத்துடன், சமூக இயக்கங்களின் ஒத்துழைப்புடன் இன்று ஜனவரி 29-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை செலவிப்நகர் என்ற குடியிருப்பு அதிகரட்டி அட்டிக்கும் முட்டிநாடு அட்டிக்கும் இடையே உதயமாய் ஒளிபெற்று உருவாகிறது.

செலவிப் நகர், நலிந்த மக்களின் ஒற்றுமைக்கு, உயர்ந்த ஓர் உதாரணம். இந்த நகரின் தோற்றத்தின் வரலாறு நீலகிரியில் வாழும் தாயகம் திரும்பிய மக்களின் தன்மானப் போராட்டத்திற்கு சான்று பகர்கிறது. வாழ்க்கையில் அநீதியையும், அச்சுறுத்தலையும், அவமானத்தையும் மட்டுமே கண்டு அனுபவித்த மக்கள் நீதியையும், மனித உரிமையையும், தன்மானத்தையும் நிலைநாட்டும் மறக்கமுடியாத நாள். இந்திய குடியரசு தினத்தை 26-ம் திகதியன்று கொண்டாடிவிட்டு 29-ம் நாள் தங்கள் அடிமை வாழ்வினை அப்புறப்படுத்தி நலிந்த இந்தியர்கள் வெற்றிவிழாக் கொண்டாடும் நாள் இந்நாள்.

தமிழகத்து மக்கள் தரித்திரர்களாக்கப்பட்டு வெள்ளையரின் வியாபார வெற்றிக்கு ஒப்பந்தக் கூலிகளாய் கடல் கடந்து இலங்கை தீவிற்கு கால்நடைகளாய் கொண்டு செல்லப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, உழைப்பு உறிஞ்சப்பட்டு, மானுடசக்கைகளாய், ஒப்பந்தக் குடிமக்களாய், மீண்டும் தமிழகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட பொழுது, தாய் தமிழகத்துக்கே அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அகதிகள் என்றார்கள், அந்நியர்கள் என்றார்கள், அண்மைக் காலத்தில் புலிகள் என்றார்கள், பொல்லாங்குக்காரர்கள் என்று சொன்னார்கள். காட்டை அழித்தார்கள் என்றார்கள், குற்றவாளிகள் என்றார்கள். நீலகிரியின் அழகைக் கெடுத்தவர்கள் என்றார்கள். இவர்களுக்கு இம்மண்ணில் உரிமை இல்லை என்றார்கள். இக்கூற்றுக்களெல்லாம் நெஞ்சில் குத்திய முள். நொந்த உள்ளத்தை மேலும் நோகச்செய்த மனிதாபிமான மற்ற கூரியமுட்கள். முள்ளுக்கு தெரியுமா அது எத்தனை தூரம் உள்ளுக்குத் துளைக்கிறதென்று?

நாடு திரும்பிய மக்கள் வீடு தேடி அலைந்தனர். குருவிகள் கூட்டின் சுகம் கூட இவர்களுக்கில்லை. இவர்கள் கட்டிய வீடுகளை தீ வைத்து மகிழ்ந்தார்கள். குடியிருந்த மக்களை விரட்டி அடிக்கும் வீராங்கனையை கலெக்டராக கொண்டு வந்தார்கள். வீட்டு மனை வழங்கிய உயர்ந்த மனிதர்களை பணச் சூழ்ச்சியால் இடம் மாற்றினார்கள் சிலர். பட்டா கொடுத்த நிலத்திலேயே வீடுகட்டுவோரை அநீதியாக விரட்டியடித்து வெறியாட்டம் ஆடினர், காவல் துறையினர். வீடு கட்ட காலியாக கிடந்த நிலங்களைக் கேட்டால் இது எங்கள் பெண்கள் மலம் கழிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எங்கள் இல்லாத கால்நடைகளை மேய்ப்பதற்கு,

இது எங்கள் பள்ளிக்கு, இது எங்கள் கோவிலுக்கு இது எங்கள் விளையாட்டரங்கிற்கு, இது எங்கள் சுடுகாட்டுக்கு இது எங்கள் சொந்த ஆக்கிரமிப்புக்கு என்றெல்லாம் அற்ப காரணங்களைக் கூறி எங்களை நிரந்தர வீடற்ற அடிமைகளாகவே வைத்திருக்க விரும்பியது நீலகிரிச் சமுதாயத்தில் ஓர் ஆணவக் கும்பல். இத்தனை நெருப்பு மழை பொழியினும், எதிர்ப்பார்ப்புகள் தீப் பிழம்புகளாய் ஆயினும் அதிலும் எதிர்நீச்சலடித்த இரும்பு மனிதர்கள் தான் இன்று புது வீடுகளுக்குள் இறுமாப்புடன் குடியேறுகிறார்கள்.



இந்த நிலத்திற்கு உரிமையில்லை. இந்த வீடுகள் கட்ட அனுமதி இல்லை, கிணறு வெட்ட முடியாது. கல்லுடைப்பது சட்ட விரோதம், புலிகளுக்கு முகாம் கட்டுகிறார்கள். வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் சேகரிக்கிறார்கள். அனுமதியின்றி செங்கல் சுடுகிறார்கள் இயற்கையை மாசுபடுத்துகிறார்கள் என்று எத்தனை எத்தனை பெட்டிசன்கள், எத்தனை விசாரணைகள்? பொறாமைத் தீயின் அசூசையின் முழுபரிமாணத்தையும் செலவிப் நகரில் குடியேறப் போகும் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இறுதியில் சத்தியமும் நேர்மையும் வெல்லும் என்பதை நிலை நாட்டினார்கள்.

இந்தக் குடியிருப்புக்கு உரிய இடம் ஒரு படுகருக் குரியதாய் இருந்தது. அவர் எத்தனையோ அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்நிலத்தை இம்மக்களுக்கு விற்றார். அவரது நேர்மையையும், மனிதாபிமானத்தையும் நாம் நன்றியறிதலோடு நினைவு கூர்கிறோம். நிலத்தின் விலையில் அரைப் பகுதி மக்கள் பணம் மீதி அரைப் பகுதி (மக்கள்) மன்றப் பணம். வீடுகட்டுவதற்கு, கிராமிய வீடமைப்பு கூட்டுறவு சங்கம் அரசாங்கம் மூலமாகக் கடன் வழங்கியது. கடன் தொகை வீட்டு செலவுக்கு மேலதிகமாக இருந்ததால், செலவிப் என்ற ஒரு சர்வதேச வீடுகட்ட உதவி செய்யும் பெல்ஜிய சங்கத்தின் நிதி உதவியை ஐலண்ட் அறக்கட்டளை மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது. மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தினர் பாதைகள் அமைக்கவும் சமூகக்கூடம் கட்டித் தரவும் உதவினார்கள். 'நீர் உதவி (WATER AID) என்ற இங்கிலாந்து நிறுவனம் கிணறு வெட்டவும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் உதவியது. மக்களே தங்களது உழைப்பையும் திறனையும் நல்கினார்கள். விஷமிகள் இம்முயற்சிகளை கெடுக்க நினைத்தபோது போலீஸ்காரர்கள் பாதுகாப்பு வழங்கினார்கள். இத்தனை ஒத்துழைப்போடு உருவாகியுள்ள இக்குடியிருப்புக்கு ''செலவிப் நகர்'' என்ற சர்வதேச பெயரிடுவது மிகவும் பொருத்தமானதாகும். தாயகம் திரும்பியோர் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் நிர்வாக இயக்குனர் திரு. எம். பாலசுப்ரமணியன் அவர்கள் இக்குடியிருப்பைத் திறந்து வைப்பதன் மூலம் இக்குடியிருப்பின் எதிர்கால முன்னேற்றத்திற்கு தாயகம் திரும்பியோர் வங்கி உதவியும் ஒத்தாசையும் நல்கும் என்ற நம்பிக்கை மொட்டவிழ்கிறது.

இந்த மனோகரமான மலைகளுக்கு மத்தியில பச்சை பசும் வயல்களுக்கு அருகே 48 வீடுகளைக் கொண்ட செலவிப் நகரின் முதல்கட்ட பணிகள் இன்றோடு முடிவடைகிறது. 37 வீடுகளைக்கொண்ட இரண்டாவது கட்டபணி விரைவில் ஆரம்பிக்கப்படும். 85 வீடுகளைக் கொண்ட இப்புது குடியிருப்பு மக்கள் வளர்ச்சியில் மைல் கல்லாகவும் வீட்டுரிமையை மக்களின் அடிப்படை உரிமை என நிலைநாட்டும் கூட்டுமுயற்சியின் சிகரமாகவும் அமைகிறது. செலவிப் நகர் மக்களை வாழ்த்துகிறோம். அவர்களின் வளர்ச்சிக்கு மன்றம் என்றும் துணைநிற்கும் என உறுதி கூறுகிறோம். □

## கூடலூரில் மாபெரும் இளைஞர் விழா பேரணி - பொதுக்கூட்டம்

நீலகிரி மாவட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை கண்டித்து வருவதோடு, அதற்கு எதிராக பல போராட்டங்களையும் நடத்தி வரும் மன்றம் கூடலூர் மாநகரில் அடிப்படை பிரச்சனைகள் குறித்து மாபெரும் இளைஞர் பேரணி, பொதுக்கூட்டம் 18-12-94 அன்று நடத்தியது. இப்பேரணி பொதுக்கூட்டத்தில் கூடலூரின் அனைத்து கிராமங்களில் இருந்தும் 7000க்கும் மேலாக மக்கள் கலந்துகொண்டார்கள். சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி கீதா கிரீதர், கோட்டயம் வழக்கறிஞர் திரு. ஜோசிஜேக்கப், ஈரோடு கண்ணையன் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினர். காந்தி திடலில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு மன்ற துணைத் தலைவர் திரு. சிங்கராஜ் தலைமை தாங்கினார். அனைத்து வட்டாரங்களிலிருந்தும் வருகைதந்த இளைஞரணி, மாதரணி பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், தாலுக்கா கமிட்டியினர் ஆகியோர் பேசினார்கள். மேலும், மன்றத் தலைவர் திரு. திருச்செந்தூரன், வட்டாரச் செயலர் திரு. எம்.எஸ்.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நீலகிரி மாவட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும், கூடலூர் பிரச்சனைகள் தொடர்பாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக மாவட்ட இளைஞரணி தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். இறுதியாக மன்ற பணியாளர் திரு. சந்திர போஸ் நன்றியுரை கூறினார்.

# சிறைவாசம் -6

**இரா. சிவலிங்கம்**

**ஆ**ங்கிலேயரின் ஏகாதிபத்தியத்திற்குள் சிக்கியிருந்த இந்தியா விடுதலைக்குப் பின் ஆட்சியாளரின் ஏகாதிபத்தியதிற்குள் சிக்கிவிட்டது. ஒரு அரசு ஊழியருக்கு மாலை மரியாதை மேளதாள வரவேற்பு ஆகியன ஜனநாயகத்திற்கு முரண்பாடான செயற்பாடுகள். இன்னும் கூட இந்தியாவில் மன்னராட்சி நடைமுறைகளும், பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி முறைகளும் அமுலில் இருக்கின்றன. ஒரு மாவட்ட ஆட்சியாளர் இன்னும் ஏகாதிபத்திய அதிகாரியைப்போல் 'கலெக்டர்' என்றே அழைக்கப்படுகிறார். ஒரு மாவட்ட ஆட்சியர் ஒரு மன்னனின் பிரதிநிதியாக நடத்தப்படுகிறரே ஒழிய ஒரு மக்களின் சேவகனாக நடத்தப்படுவதில்லை. இதனால் தான் தலைமை அரசாங்க ஊழியரான ஒரு கலெக்டருக்கு மக்கள் தரும் மரியாதை, நடத்தும் விதம் அனைத்துமே ஒரு ஏகாதிபத்திய நாட்டில் ஒரு ஆட்சிப் பிரதிநிதிக்கு வழங்கப்படும் பூரணகும்ப மரியாதைக்கு ஏற்றதாக இருக்கிறது. இந்தக் கலெக்டர்கள் அனைவருமே அப்படிபட்டவர்கள் அல்ல. சிலர் மக்கள் பற்றினாலும் சனநாயக பண்பாட்டினாலும் மக்களுக்கு தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து மனிதாபிமானத்தோடு நடத்துகொள்கிறார்கள். மிகப் பலரோ கர்வத்தோடும், ஆணவத்தோடும் நடந்து கொள்வதோடு மட்டுமல்ல, தமது சுயநல நோக்கோடேயே செயற்படுகிறவர்கள். அப்படிப்பட்ட கலெக்டர்களில் ஒருவராக லீனு நாயர் இருந்தார். அவர் நீலகிரி சிம்மாசனத்தில் வீற்றிருந்து கொடுங்கோல் செய்த பொழுது தான் நீலகிரியில் வாழ்ந்த தாயகம் திரும்பியோர் சொல்லொணாக் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அர்த்தமில்லாமல் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். அந்த தாங்க முடியாத அநீதியை எடுத்துச்சொல்லப் போன சமூகத் தொண்டர்களை சிறைப்படுத்திக் கொக்கரித்தார் அந்த அம்மையார். உண்மையாகவே அவர்களை தடுப்புக் காவலில் வைத்ததற்கு அம்மக்கள் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் பண வசதியோ சட்ட உரிமைகளோ தெரியாத ஏழை மக்கள் தம்மை வெளியில் விட்டால் போதும் என்று திருப்தி அடைந்து விடுகிறார்கள். மக்களின் இந்த கையாலாகாத தன்மையினால் தான் ஆணவ அதிகாரிகள் ஆணவம் அடங்காமலேயே இருந்து விடுகிறார்கள். எனினும் சிறிது வசதி படைத்த சில வியாபாரிகளின் கடைகளை சட்ட விரோதமாக உடைத்ததால் அவர்களுக்கு லீனு நாயர் நஷ்டஈடு வழங்க வேண்டுமென சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது, இதுதான் இயற்கை நீதி. அநீதி செய்தவர்கள் எப்படியோ, ஒரு வகையில் தண்டிக்கப்படுகிறார்கள்.

அதுபோலவே அநீதியாக என்னைச் சிறையில் அடைத்து அந்நியர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்த அறிவுகெட்ட அதிகாரிகள் ஏதோ ஒரு வகையில் தண்டிக்கப்படுவார்கள் என்ற அசையாத நம்பிக்கை எனக்குண்டு.

அண்மையில் செங்கற்பட்டு சிறையில் இருந்து வெளிவந்த ஓராண்டுக்குள் அந்த சிறப்பு முகாமில் பேயாட்டம் ஆடிய ஒரு அதிகாரியை உயர் நீதிமன்றம் ஐயாயிரம் ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவிட்டது. திருமதி வெங்கடேஸ்வரி ஒரு இந்தியப் பெண். அவர் நித்தியானந்தனை மணந்தார். நித்தியானந்தன் ஓர் இலங்கைத் தமிழர். அவரையும் அந்நியர் சட்டத்தின் கீழ் செங்கற்பட்டு முகாமில் சிறை வைத்தார்கள். இவர்கள் மேலதிகாரிகளுக்கு எத்தனையோ முறையீடு செய்தும் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஓர் இந்தியப் பெண்மணியை எப்படி அந்நியர் சட்டத்தின் கீழ் சிறை வைக்க முடியும்? இது தவறு என்று உணர்த்துவதற்கு உச்ச நீதி மன்றம் தேவையா? எவ்வளவு மனிதாபி மானமற்ற முறையில் செங்கல்பட்டு சிறப்பு முகாம் நடைபெறுகிறதென்பதற்கு இது ஒரு உதாரணம்.

எனது விடுதலைக்காக சட்டரீதியில் முயற்சி செய்த வழக்கறிஞர்களுள், பி.வி.எஸ். கிரிதர் முக்கியமானவர். நான் விடுதலை அடைவதற்கு முன்னரே அவரைப்பற்றி செங்கல்பட்டில் சிறை வைக்கப்பட்டவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த அம்மையார் தனது நிலையை கிரிதருக்கு அறிவித்திருந்தார்கள். அவர் வெங்கடேஸ்வரி சார்பில் வழக்குப்போட முன்வந்தார். ஆனால் வழக்கறிஞருக்கு தரவேண்டிய வக்காலத்தில் தாசில்தார் ஒப்பம்போட மறுத்துவிட்டார். இது அதிகார ஆணவம். வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது வெங்கடேஸ்வரியை சட்ட விரோதமாக சிறை வைத்ததற்காக தமிழக அரசு ரூ. 50,000/-ம் நஷ்டஈடும், தாசில்தார் தனது சொந்த பணத்திலிருந்து ஐயாயிரமும் அந்த அம்மாவுக்கு தர வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. இது செங்கல்பட்டு சிறப்பு முகாமின் கொடுமையை ஈவிரக்கமற்ற நிர்வாகத்தை உலகுக்கு உணர்த்தியது. எப்படியோ அகம்பாவ அதிகாரிகள் தண்டனை அனுபவித்தே தீர்வார்கள்.

அநியாயமாக ஒருவரைக் கைது செய்ய வேண்டும் என்று ஒரு ஆணவக்கார அதிகாரி முடிவு செய்தாலும் அதனைக் கூட ஏதோ ஒரு சட்டத்தைக் காட்டிதான் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறதே அந்த அளவில் சட்டமும், சனநாயகமும் சற்றே பிழைத்திருக்கின்றன. சட்டத்தின் அடிப்படையில்தான் ஆட்சி நடத்த வேண்டும் என்ற நியதி **( Rule of Law )** இன்னும் உயிர்த்துடிப்போடு இருக்கிறது. பல சமயங்களில் இந்த

நியதிகள் புறக்கணிக்கப்படுவதுண்டு. ஆனால் இதனை முற்றிலும் நிராகரிக்க முடியாது.

ஆனால் கைது செய்வதற்கு முன்னரே காரணம் சொல்ல வேண்டும். இதில்லாமல் போலீசாரை அனுப்பி காரணமின்றி இராணவப் பாதுகாப்போடு செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்கு கொண்டு சென்றபின்னர் அந்நியர் சட்டம் பிரிவு 3(2)யின் கீழ் இந்த முகாமில் இருக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளீர் என்று கூறுவதே ஒரு வகையில் நியாயமான செயலல்ல. முன்னரே கூறியிருந்தால் அந்த ஆணைக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கலாம். சிறைக்குள் வைத்தபின்னர் காரணம் காட்டுவது நிவாரண நடவடிக்கைகள் எடுப்பதற்கு பல இடைஞ்சல்களை ஏற்படுத்தும்.

அந்நியர்கள் சட்டம் என்பது 1946ம் வருடம் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. பொதுவாகவே காமன் வெல்த் நாடுகளுக்கு உட்படாத பிற அந்நிய பிரஜைகளின் நடவடிக்கைகளைக் கட்டுபடுத்துவற்காக இயற்றப்பட்ட சட்டம். இச்சட்டம் இலங்கைப் பிரஜைகளையும் பாதிக்காது. பொதுநல நாட்டு பிரஜைகளையும் பாதிக்காது. ஆனால் 1958ம் ஆண்டு உள்நாட்டு அமைச்சு வெளியிட்ட அரசாணைப்படி இந்த சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் இந்த சட்டத்தை மாநிலங்களுக்கு வழங்கிய அரசாணையும் இதை இலங்கை அகதிகளுக்கு எதிராக பயன் படுத்துவதும் உள்நாட்டு வெளிநாட்டு சட்டங்களுக்கு எதிரானது என்பதும், சர்வதேச மனித உரிமைக்கும், சர்வதேச அகதிகள் பற்றிய ஒப்பந்தத்திற்கு முரணானது என்பதும் சட்ட நிபுணர்களின் முடிவு. குறிப்பாக இந்தியா இலங்கை அகதிகளுக்கும் எதிராக அமுல் நடத்த முடியாது என்பது எனது ஆணித்தரமான கருத்து. குறிப்பாக தமிழக அரசு இந்த சட்டத்தை அமுல் நடத்தும் முறை கேலிக்கூத்தானது என்பதும் எல்லா சட்டங்களுக்கும் முரண்பாடானது என்பதும் ஐயமில்லை. இது முக்கியமான சட்டப்பிரச்சினை என்பதால் இதன் நுணுக்கங்களை மேலும் விவரிக்காமல் இத்துடன் விடுகிறேன். இந்த சட்டத்தை இவ்வாறு தமிழ் நாடு துஷ்பிரயோகம் செய்வதை இன்னும் முறையாக எவரும் உச்சநீதி மன்றம் கொண்டு சென்று வாதாட வில்லை. அவ்வாறு செய்யின் இன்று சிறப்பு முகாம்களில் உழலும் பலருக்கு விடிவேற்படும் என்பதில் ஐயமில்லை.

ஒரு அந்நியன் நாட்டில் தொடர்ந்து இருக்கத் தகுதியற்றவன் என்று கருதினால், அவரது விசாவை மறுக்கலாம். அவருக்கு எதிராக வழக்குத் தொடரலாம் அல்லது சட்டப்படி நாடு கடத்தப்படலாம். இத்தனை அதிகாரங்கள் ஒரு அரசுக்கு இருக்கும் போது இவற்றில் எதனையும் பயன்படுத்தாது, காரணமின்றி கைது செய்து, காலவரையறை இன்றி சிறைக்கூண்டில் அடைத்து வைத்து வெளியில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பொழுதுகூட கைவிலங்கிட்டு கால்விலங்கிட்டு, அந்நியர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்குமாறு மட்டுமே கூறியுள்ளோம். என்று உண்மையைச் சாகடித்து பொய்மையை பறைசாற்றும் அரசுஅதிகாரிகளையும் எப்படிக் கணிக்கலாம் எப்படி மதிக்கலாம்?

அண்மையில் தஞ்சையில் நடந்த உலகத்தமிழ் மாநாடுக்கு அழைப்பில் வந்த அறிஞர்களை அவமதித்து சட்டவிரோதமாக நாடுகடத்திய நடவடிக்கையை உலகமே கண்டித்தது. உலகத்தமிழ் படத்தில் இலங்கையை போடாத அளவுக்கு மூர்க்கத்தனமான செயலில் இறங்குபவர்களுக்கு அப்பாவி இலங்கைத் தமிழர்களை அநியாயமாக சிறைப் பிடித்து கொடுமைபடுத்துவது ஆச்சரியமில்லையல்லவா?

இத்தகைய சூழ்நிலை நிலவுகின்ற தமிழகத்தில் என்னை சிறைப்பிடித்து நாடுகடத்த வேண்டுமென்று கைலஞ்சம் வாங்கிக்கொண்டு செயற்பட்ட ஒரு ஆட்சியாளரும், காவல்துறையினரும் பயன்படுத்திக் கொண்டதுதான் அந்நியர் சட்டம்.

இவ்வாறு துன்புறுத்தும் கொடுங்கூடங்களுக்கு சிறை முகாம்கள் என்பது தமிழ்ப்பெயர் ஆனால் தமிழகக் காவல் துறையினர் வழங்கிய தந்திரப் பெயரே சிறப்பு முகாம்.

(தொடரும்)

## குடும்ப ஆலோசனைக் கருத்தரங்கு

**11—12—94** அன்று கோத்தகிரி மன்ற அரங்கில் ஒருநாள் குடும்ப ஆலோசனைக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு மன்ற தலைவர் திரு. சு. திருச்செந்தூரன் தலைமை தாங்கினார். கருத்தரங்கில் உதகை சரணாலயாவிலிருந்து செல்வி யாமினி, செல்வி பத்மாவதி ஆகியோர் கலந்துக் கொண்டு குடும்ப ஆலோசனை என்றால் என்ன, அதன் முக்கியத்துவம் குறித்தும் கிராமமக்கள் தங்களின் பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது, பிரச்சனைகள் வரும்போது அதை பெரிது படுத்தாமல் தீர்த்துக் கொள்வது எப்படி என்பது பற்றியும் கூறினார்கள்.

இக்கருத்தரங்கில் பல்வேறு குடியிருப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 35 பெண்கள் கலந்து கொண்டனர். மதிய உணவு இடைவேளைக்கு பிறகு மன்ற பணியாளர்களுக்கு குடும்ப ஆலோசனை பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் வட்டார மாதரணி செயலர் திருமதி. லட்சுமி வரவேற்புரை கூற மாவட்ட மாதரணி தலைவி திருமதி. என். சுந்தராம்பாள் நன்றி கூறினார். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை பெண்கள் முன்னேற்ற திட்ட அலுவலர் செல்வி அனுபமா மேனன் மற்றும் மன்ற பணியாளர்களும் செய்திருந்தனர்.

# சுயமனைப் போராட்டம் ஒரு தன்மானப் போராட்டம்

எம். சந்திரசேகரன்

நீலகிரி மண்ணில் ஒரு புதிய சமுதாயம் மலர்கிறது. இந்திய - இலங்கை அரசுகள் 1964, 1974-ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள். அதன் அடிப்படையில் இங்கு கூட்டி வந்தார்கள். வீடுகட்ட நிலம், கடன், வேலை வாய்ப்பு, விவசாயம் செய்ய நிலம், குழந்தைகள் படிப்பதற்கு வசதிகள் இப்படி பல உறுதிகளை ''மறுவாழ்வு திட்டம்'' என்ற பெயரில் அள்ளி வீசி, ஆசை வார்த்தைகளை ஊட்டினார்கள். நம்பினார்கள் இந்த மக்கள். 'தாய் வீட்டிற்கு' போகிறோம் நம்மை வாழ வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் இங்கு வந்து சேருகிறார்கள். ஆனால் இந்த மண்ணில் ஏற்பட்டதோ பல்வேறு விதமான கசப்பான அனுபவங்கள். 'மறுவாழ்வு திட்டங்கள், வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஆயின. தமிழகத்தில் சமவெளிப்பகுதியில் சுட்டெரிக்கும் வெய்யிலையும், சுரண்டும் அவலங்களையும் இவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

## மலைகளில் குடியேற்றம்

பல தலைமுறைகள் பச்சைப் பசேலென்ற தேயிலைத் தோட்டங்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட இவர்களுக்கு தமிழகத்தின் சமவெளிப்பகுதி வாழ்க்கை ஒத்து வரவில்லை.

வேலைவாய்ப்புகளுக்காக இவர்களை கொடைக்கானல் ஏற்காடு, வால்பாறை, நீலகிரி மலைகள் ஈர்க்கிறது. பல தலைமுறைகள் பழக்கப்பட்ட தொழிலில் தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றனர்.

## கொத்தடிமைகள்

நீலகிரியின் தேயிலைத்தோட்டங்கள் கண்ணுக்கு இதமாக காட்சி அளிக்கிறது. தேயிலை, காப்பி, காய்கறி தோட்டங்களில் குறைந்த கூலியை வாங்கிக் கொண்டு அதிக வேலை செய்ய ஆட்கள் இல்லையே என ஏங்கிக்கொண்டிருந்த தோட்ட முதலாளிகளுக்கு இந்த மக்களின் வருகை மிக்க மகிழ்ச்சியை கொடுக்கின்றது. 'ஆடு நனைகிறது என ஓநாய் அழுததாம்' இந்த உழைப்பாளிகள் மேல் பரிதாபம், பற்று, பாசம். தயாளகுணம் இவைகளா இந்த மக்களை வரவேற்றது? இந்த குணங்களா இங்குள்ள தோட்ட முதலாளிகளிடம் நிறைந்து காணப்பட்டது? இல்லை இல்லை. தங்கள் இஷ்டம் போல சுரண்டலாம், உழைப்பை உறிஞ்சிக் குடிக்கலாம் என்ற எண்ணத்தில் சுரண்டலின் இரு கரங்களையும் அகல விரித்து வரவேற்றார்கள். தங்கள் தோட்டங்களில் வேலைக்குச் சேர்த்துக்கொள்கிறார்கள். அங்கேயே குடியிருக்க 'குடிசைகளை' (ஏற்கனவே அதில் ஆடு, மாடு அடைத்து வைத்திருந்தனர்) ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். 10, 12 மணி நேர அயராத கடும் உழைப்பு, தோட்ட முதலாளிகள் கொடுத்ததே கூலி. கூட்டிக் கொடுங்கள் கூலியை எனக் கேட்டால் அடி, உதை அவமானப்படுத்தப்பட்டார்கள். கொத்தடிமைகளை விட கேவலமாக இந்த உழைப்பாளிகள் நடத்தப்பட்டார்கள். எத்தனை நாள் தான் இந்த உழைப்பாளிகளால் இப்படி வாழ முடியும்!

## சுதந்திர தீ

பல தலைமுறைகள் சொந்தமான வீடுகளிலே வாழ்ந்து பழக்கப்படாத இவர்கள் உள்ளத்தில், கொத்தடிமை வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, சொந்த வீடுகளிலே குடியேற வேண்டும் என்ற சுதந்திர வேட்கை சுதந்திர தீ சுடர் விட்டு எரிய ஆரம்பிக்கிறது. அதற்கு மலையக மக்கள் மறுவாழ்வு மன்றமும், உந்து சக்தியாக ஊக்குவிக்கிறது. ஒத்துழைப்பு கொடுக்கிறது.

குடியிருப்புகள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றன, கொத்தடிமைகளாக வைத்துக்கொண்டு இம்மக்களின் உழைப்பை சுரண்டிக் கொழுத்த கூட்டத்திற்கு வெறுப்பேற்படுகிறது. தனது அடிமை சுதந்திரம் பெற்று பிரிந்து செல்வதை இந்த சுரண்டல் கூட்டத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

## குடிசைகள் எரிப்பு

மலைமுகடுகளிலும், அரசு புறம்போக்கு நிலங்களிலும், அரசு கொடுத்த பட்டா நிலங்களிலும் குடிசைகள் கட்டி குடியிருந்தவர்களை இந்த சுரண்டல் கூட்டம் அடித்து விரட்டுகிறார்கள். குடிசைகளை நொறுக்குகிறார்கள், தீ வைக்கிறார்கள்.

கேத்தி, கண்ணேரிமூக்கு, கொணவக்கரை, சோலூர்மட்டம், அரவேனு பாறைமேடு, மூனுரோடு, கேர்பட்டா, டானிங்டன், எஸ். கைக்காட்டி, அளக்கரை பழத்தோட்டம், இத்தலார் அரையட்டி, பிக்கட்டி, கூக்கல்தொரை, ஆகிய இடங்களில் குடிசைகள் கொளுத்தப்பட்டன. அடித்து நொறுக்கப்பட்டன. விரட்டப்பட்டனர். என்ன கொடுமை!

காவல் துறையும், வருவாய்த் துறையும் இவற்றை கண்டுகொள்ளவே இல்லை. சுரண்டல் வாதிகளின் சொந்த, பந்தங்கள் தானே இங்கு அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறார்கள். எப்படி நீதி கிடைக்கும்? இந்த உழைப்பாளிகளைப் பொறுத்தமட்டில் நீதியின் கண்கள் கட்டப்பட்டு விட்டன. கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன என்றுதான் கூற வேண்டும்.

## நல்ல இதயம்

குன்னூரில் காட்டேரி கிராமத்தைச் சேர்ந்தவர் திரு. சிவனாண்டியின் மனைவி மைதிலி. இவருக்கு சொந்தமான நிலம் முட்டிநாட்டில் சர்வே எண், 718ல் இருக்கிறது. இதில் 1 ¾ ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு அதிகரட்டி பகுதியில், தனியார் வீடுகளில் குடியிருந்து கொண்டு வரும் 85 குடும்பங்கள் தீர்மானிக்கிறார்கள். 1-6-1992ல் முடிவெடுத்து, மேற்படி நல்ல இதயம் படைத்த நபருடன் சென்று பேசுகிறார்கள். அவரும் படுக சமுதாயத்தைச் சேர்ந்தவர், அவர் மறுப்பு கூறாமல் உடனடியாக விற்பதற்கு சம்மதம் தெரிவித்து, முன் பணமும் வாங்கிக் கொள்கிறார். விற்கப் போகும் விபரம் காட்டுத்தீயாக பரவுகிறது. பொறுக்க முடியவில்லை சுரண்டல் வாதிகளுக்கு. தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு இந்த நிலத்தை விற்கக் கூடாது, இவர்கள் விடுதலைப் புலிகள் எனக் கூறி, பல்வேறு பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் மீறி, கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீருவேன் என கூறி மேற்படி திருமதி மைதிலி அவர்கள் பேசிய நிலத்தை அதிகரட்டி மக்களுக்கு விற்றுவிட்டார். விற்பனையில் தான் எத்தனை நாடகங்கள்.

## அதிகரட்டி - முட்டிநாடு

குன்னூரிலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த கிராமம் அமைந்துள்ளது. 85 குடும்பங்கள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி, இந்த இடத்தை வாங்குவதற்கு திட்டம் போட்டபோதும், முழுப் பணத்தையும் அவர்களால் வசூலிக்க முடியவில்லை. மிகக்குறைந்த கூலிக்கு வேலை செய்து வாழ்க்கை ஓட்டி வரும் இந்த உழைப்பாளிகளால் எப்படி அவ்வளவு பெரும் தொகையை தேடமுடியும். பற்றாக்குறைக்கு மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தை நாடி ஓடி வருகிறார்கள். பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. 'இதோ, நாங்கள் இருக்கிறோம். துணிந்து செயலில் இறங்குங்கள், என மன்றம் நேசக்கரம் நீட்டுகிறது.

ஒரு புதிய சகாப்தம், புதிய அத்தியாயம் இந்த மக்கள் மத்தியில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. புதிய விடியலை நோக்கி அதிகரட்டி மக்கள் தாயகம் திரும்பிய உழைக்கும் தமிழர்கள் நடைபோட ஆரம்பித்து விட்டனர். எந்த சக்தியாலும் இவர்களை தடுத்து நிறுத்திட முடியாது என்பது திண்ணம். உழைப்பவரின் கூட்டு முயற்சியால் ஒரு புதிய குடியிருப்பு அதிகரட்டி, முட்டிநாடு கிராமத்தில் மலர்கிறது.

# சட்டப்பயிற்சி கருத்தரங்கு

ஜனவரி 8, 9, ஆகிய தேதிகளில் மலையக மக்கள் மறுவாழ்வு மன்றமும் நலிந்தோர் நல மையமும் இணைந்து மன்ற அரங்கில் சட்டப் பயிற்சி கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இக்கருத்தரங்கிற்கு மன்ற தலைவர் திரு. திருச்செந்தூரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இதில் சட்டமும் சமுதாயமும் பற்றி மன்ற நெறியாளர் திரு. இர. சிவலிங்கம் அவர்கள் பேசும்போது சட்டம் அனைவருக்கும் சமம். நமது சமுதாயத்தை கட்டுபடுத்துவது சட்டம். இன்று காவல் துறையினர் மற்றும் அரசுதுறை அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோர் சட்டத்தையே மீறிவருகின்றனர். இதனால் ஏழை மற்றும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இம்மக்கள் சட்டத்தை தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். சட்டங்கள் இன்று செல்வந்தர்களின் ஆயுதமாக உள்ளது. இச்சட்டத்தை ஏழை மக்களுக்கு பயன்படும் வகையில் செயல்பட வைக்க வேண்டும் என்றார்.

உயர்நீதி மன்ற வழக்குரைஞர் திரு. தேவசிகாமணி நீதிமன்றமும், சட்டமும் தனி மனிதனின் உரிமையை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றி பேசினார். பின்பு நுகர்வோர்களின் சட்டங்கள், கடமைகள் குறித்து கோத்தகிரி போதை பொருள் ஒழிப்புக்குழு அமைப்பாளர் திரு. ராஜு அவர்கள் பேசினார்.

இரண்டாம் நாள் நடந்த பயிற்சிக்கு மன்ற நெறியாளர் திரு. இர. சிவலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தேவக்கோட்டையை சேர்ந்த வழக்குரைஞர் திரு. கணேசன் உரிமையியல் சட்டங்கள், சொத்துரிமை சட்டங்கள், காவல்துறைச் சட்டங்கள் பற்றியும் உதகை குடும்ப ஆலோசனை மையத்தைச் சேர்ந்த திருமதி. யாமினி பெண்களின் சட்ட உரிமைகள், குழந்தை திருமணச்சட்டங்கள் பற்றியும், கோத்தகிரி நலிந்தோர் நல மையத்தைச் சேர்ந்த செல்வி. அனுபமா மேனன் குற்றவியல் சட்டங்கள் பற்றியும் பேசினார்கள்.

இக்கருத்தரங்கை நலிந்தோர் நல மையத்தைச் சேர்ந்த திட்ட அலுவலர் திரு. ஜேக்கப், செல்வி. அனுபமா மேனன் ஆகியோர் ஏற்பாடு செய்தார்கள். இதில் மன்ற பணியாளர்கள், கல்லூரி மாணவ மாணவிகள், கிராம மக்கள் என 68-க்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இறுதியில் கோத்தகிரி வட்டச் செயலர் திரு. ரா. கி. ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

# அதிகரட்டியில் ஓர் புதிய கிராமம் உதயம்

**வீடமைப்பு எமது மன்றத்தின் முக்கிய பணிகளில் ஒன்று. இதுவரை ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு விட்டன. அந்த ஆயிரத்துக்குள் இந்த "செலவிப் நகர்" வீடுகளும் உள்ளடங்குகிறது. செலவிப் நகர் உருவான கதையினை இங்கு நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்...**

குன்னூர் வட்டாரச் செயலர் **வே. மதிவாகனம்**

"உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் இந்தியாவும் ஒன்று எனவும், இந்தியா சுதந்திரம் பெற்று பல வருடங்களுக்கு பிறகும் இனம், மதம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் போன்ற துறைகளில் வேறுபட்டாலும் நாம் அனைவரும் இந்தியர்கள்" என்று அரசியல் வாதிகளும் பணக்கார வர்க்கத்தினரும் வாய்கிழிய பேசி வருகின்றனர். ஆனால், சுதந்திரத்திற்கு பிறகும் பல ஆண்டுகள் உருண்டோடியும் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் கிராமப்புற மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மை. பணக்கார வர்க்கத்தின் தூண்டுதலாலும், திட்டமிட்ட சூழ்ச்சிகளாலும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் சாதிய கொடுமைகளுக்கும், அரசியல் பொருளாதார துறைகளில் வஞ்சிக்கப்பட்டும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டும் வந்துள்ளதை நாம் மறந்துவிட முடியாது. அன்று அந்நியனுக்கு அடிமையான நாம் இன்று இந்திய இன-வாத பெரும் முதலாளித்துவவாதிகளுக்கு அடிமை என்பதே உண்மை. ஆட்சி அதிகாரங்களை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையை சூறையாடி தீயிட்டு குளிர்காயும் வக்கிரபுத்திக் கொண்டவர்களின் செயல்கள் நமது நீலகிரி மாவட்டத்தையும் ஆட்டிப்படைக்காமல் சும்மா விட்டு வைக்கவில்லை.

நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலூக்காவிலுள்ள அதிகரட்டி கிராமம் மாவட்டத்திலேயுள்ள இரண்டாவது பெரிய கிராமமாகும். இங்கு வாழும் முதலாளிகளின் வீட்டில் இருபது வருடகாலமாக கொத்தடிமைகளாக வாழ்ந்த ஏழைமக்கள், தாயகம் திரும்பிய மக்கள், தலித்மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளில் ஒன்றான ஒரு வீட்டை சொந்தமாக உருவாக்கி உரிமையோடு வாழ நினைத்தது குற்றமா அல்லது தேசவிரோத குற்றமா? 'குற்றம் புரிந்தவன் மாடியிலே குருதி சிந்தியவன் வீதியிலே' என்பதற்கு ஏற்றாற்போல் 1991-ஆம் வருடம் சர்வே எண். 1039-1044 அரசு நிலத்தை அம்மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென அம்மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று அப்போதைய மாவட்ட ஆட்சியர் திரு. ஜி. ஏ. ராஜ்குமார் அவர்களால் முயற்சிகள் நடந்தும் சூட்சுமக்காரர்களின் சூனியம் பலித்துவிட்டதால் ஏழைகளின் வாழ்வில் பட்டா எட்டாக்கனியாகிவிட்டது. காரணம் சொந்த வீடு இல்லாமல் அடிமையாக இருந்தால்தான் குறைந்த கூலியை கொடுத்து முதலாளிகள் தங்களின் வேலைகளை பூர்த்தி செய்துக்கொண்டு தங்களின் ஏகோபித்த சொகுசான வாழ்க்கையை வாழலாம் என்ற வறட்டுத் தனமான வக்கிரப்புத்தியேயாகும். 1992-ஆம் ஆண்டு மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் ஆலோசனையின் பேரில் காட்டேரி அட்டியைச் சேர்ந்த திருமதி மைதிலி என்பவரிடம் 1.77 செண்ட் நிலத்தை அம்மக்கள் சிறுக சிறுக சேமித்த தொகையினை மன்றத்தின் உதவியோடு கொத்தடிமையை மீட்போம் கொடுமைக்கு கொல்லி வைப்போம்' என்ற நோக்கில் 85 குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்து தலா இரண்டு செண்ட் வீதம் பணம் கொடுத்து வாங்கினார்கள். ஆரம்பத்தில் மற்றவர்களுக்கு தெரியாமலிருந்த இந்த செய்தி கடைசி நேரத்தில் தெரிய வந்ததால் இந்த இடத்தை கொடுக்க வேண்டாம் என கொடுமையாளர்களின் கெட்ட எண்ணத்தால் தடைகள் ஏற்படுத்த முயற்சித்தனர்.

அவர்களின் தடைகளையும் மீறி ஏழை மக்களின் மீது பற்றும் பாசமும் வைத்திருந்த திருமதி மைதிலி அவர்கள் தனது வாக்குறுதியை காப்பாற்றியதின் மூலம் அம்மக்களின் தன்மானத்தை காப்பாற்றிய அவர்களின் குடும்பத்தாரை வாழ்நாளில் மறவோம். அதன் பின் அதிமுக செயலாளரும், கூடலூர் சட்டமன்ற உறுப்பினருமான திரு. கே. ஆர். ராஜூ அவர்களின் சிபாரிசின் பெயரிலும், குன்னூர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தமிழ்நாடு அட்கோ நிறுவனத்திடமிருந்து வீட்டு கடனாக ரூ. 10,500 வீதம் பெற்று மன்றத்தின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் பல தடைகளுக்கும் மத்தியில் தங்களது விடாமுயற்சியாலும் மக்கள் சக்தியின் மீது இருந்த அசைக்க முடியாத நம்

பிக்கையின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க வீடுகளை கட்டிய பெருமை அம்மக்களையும் மன்றத்தையுமே சாரும்.

''அன்று ஒரு இராவணன் இல்லையேல் இன்று ஒரு கம்ப ராமாயணம் இல்லை'' மகா பாரதத்தில் வந்த சகுனியை போல் வந்த முட்டிநாடு இராமையா ஆரம்பத்திலிருந்து பல தொல்லைகள் கொடுத்து வந்ததோடு, அவரது நிலத்தை இலங்கைத் தமிழர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதாக வக்கீல் மூலம் நோட்டீஸ் அனுப்பினார் நாமும் தக்க பதில் அனுப்பிய பிறகு அடங்கி போனார் ராமையா. இது நமது நியயாமான உழைப்புக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். அதன் பிறகு பல வழிகளிலும் மக்களை அடியாட்கள் மூலம் மிரட்டி வந்ததோடு, பொய்க் குற்றச்சாட்டுகளையும், புகார்களையும் கொடுத்ததன் பெயரில் அரசு அதிகாரிகளும் க்யூபிராஞ்ச் போலீசாரும் விசாரணை மேல் விசாரணை நடத்தி மிரட்டி வந்ததோடு அம்மக்களின் அடிப்படை உரிமைகளை தடுத்தது மனித உரிமை மீறிய செயலாகும்.

மேலும் உதகையிலிருந்து சில ரவுடிகளைக் கொண்டு வந்து தண்ணீர்குழாய் செங்கற்கள் போன்ற பொருட்களை உடைத்து சேதப்படுத்தியதோடு, அம்மக்களை மிரட்டியும் வந்துள்ளனர். இது தொடர்பாக கொலக்கம்பை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதின் பெயரில் விசாரிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளார். ஆனால் மீண்டும் மீண்டும் சில புகார்களை கூறியதோடு அம்மக்களை வீடு கட்ட விடாமல் பல வழிகளிலும் தடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. வாழப்பாடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் ஆகியோர்களுக்கு அனுப்பிய புகார் மனுவில் இலங்கை தமிழர்கள் அதிகரட்டி பகுதியில் வெடி மருந்துகள் வைத்து கல் உடைப்பதாகவும் சுற்றுப்புறச்சூழ்நிலை கெட்டு விடுவதாகவும், பயங்கர ஆயுதங்கள் வைத்து அப்பகுதியில் முகாம்கள் கட்டி வருவதாகவும் இவர்களுக்கு கோத்தகிரியில் உள்ள ஓர் அமைப்பு பண உதவி செய்வதாகவும் இவர்களின் நடவடிக்கைகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி மரணத்திற்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக பச்சை பொய் கூறியுள்ளார். இந்த புகார்களின் பெயரில் மிரட்டி விசாரித்ததோடு மன்றத்தின் தலைவர் திரு. எஸ். திருச்செந்தூரன் அவர்களையும் நேரடி விசாரணை செய்தனர். விசாரணை செய்த பின், விசாரணை செய்த அதிகாரிகள் எந்த தப்பும் செய்யாத ஏழை மக்களை மிரட்டினார்கள் தவிர இதற்கு காரணமானவரும் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கை கெடுத்து இனமோதலை உருவாக்க பல முறை முயன்ற ராமையாவை கைது செய்யாதது வியப்பளிக்கிறது. இதற்கு ஒரே காரணம் அவர் முன்னர் காவல் துறையில் பணியாற்றியதே. ஆகவே, அரசு அதிகாரிகள் அவருக்கு சலுகை காட்டுகின்றனர் என்று நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இறுதிவரை ஒன்றுமே செய்ய முடியவில்லை என்பதை உணர்ந்தபின் மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், அதிகரட்டி கிளை தலைவருமான திரு. ஆர் காலிங்கனை 19-11-94 அன்று உதகையில் சில ரவுடிகளை வைத்து தாக்கியுள்ளார். இக்காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்து 21-11-94 அன்று குன்னூர் நகரில் ஆண்களும், பெண்களும் அணிதிரண்டு 250 பேர்கள் கண்டன ஊர்வலமாக சென்று மாவட்ட துணை ஆட்சியர், மாவட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோரிடமும் நடவடிக்கை எடுக்க கோரி மனுக்கொடுத்தும் இது வரை எந்தபயனும் அளிக்கவில்லை. மன்றத்தின் பல கிராமத்தைச்சேர்ந்த உறுப்பினர்கள் கோப் மாணவர்கள் இளைஞரணியினர், மாதரணியினர், தாலுகா கமிட்டியினர் ஆகிய அனைத்து பிரிவினரும் இக்கிராமத்தில் வீடுக் கட்டும் பணியை ஆதரிக்கும் வகையில் ஒருநாள் சிரமதான வேலைசெய்து தங்களின் இயக்க உணர்வையும், கூட்டுழைப்பையும் வெளிப்படுத்தியது. அம்மக்களுக்கு உற்சாகத்தையும், புதிய நம்பிக்கையும் உருவாக்கியது. எல்லாவற்றுக்கும் மேலாக மன்றத்தின் தலைவர், இயக்குனர், பொறுப்பாளர்கள் காட்டிய அன்பும் ஆதரவும் அம்மக்களின் புதிய கிராமத்தை உருவாக்க வழிவகுத்தது. நமது உழைப்புக்கும் நேர்மைக்கும் நீதிக்கும் கிடைத்த இந்த வெற்றியின் மூலம் சமூகவிரோத கும்பலுக்கும், சர்வாதிகாரத்துக்கும் துணைபோகின்ற செயல்களை தகர்த்தெறிய நாம் திட்டமிட்டு எடுக்கும் எந்த செயலும் தோற்பதில்லை என்பதே சான்றாகும்

இருப்பினும் மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் தனது பத்தாவது ஆண்டை நிறைவு செய்யும் இவ்வேளையில் வரலாற்று சிறப்புமிக்க அப்பகுதி மக்கள் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி வைத்துள்ளதை அவர்கள் வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். இப்பகுதியில் வாழும் மக்களை கொத்தடிமையிலிருந்து மீட்க எதிரிகளின் அடக்குமுறைக்கும் அஞ்சாமல் தனது பணியினை மக்களின் ஆதரவுடன் நிறைவேற்றியது மக்கள் சக்தியே மகத்தான சக்தி. ஒற்றுமையே வெற்றியின் ஏணிப்படிகள், ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு ஏற்றாற்போல் மன்றம் அமைப்போம் கொத்தடிமையை மீட்போம், தொடர்ந்து செயல்படுவோம் வெற்றி பெறுவோம்.

# சுற்றுச் சூழல் கல்வியில் மன்றம்

## இயற்கையின் இமைகள்

4-12-94 அன்று கோத்தகிரி மன்ற அரங்கத்தில் ''இயற்கையின் இமைகள்'' சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுவின் ஐந்தாம் கட்டத்தொடர் கருத்துப்பட்டறை நடைபெற்றது. இதில் புதிய வனமசோதா, இறால் மீன் பண்ணை, நீலகிரி சுற்றுச் சூழல் அமைப்புகள் அதன் செயல்பாடுகள் போன்ற தலைப்புகளை ஒட்டிய தாக இக்கருத்துப்பட்டறை இருந்தது. இக்கருத்துப் பட்டறையை சுற்றுச் சூழல் பொறுப்பாளர் திரு. க. பாலசுப்பிரமணியம், பயிற்சி பொறுப்பாளர் திரு. எஸ். ஆனந்தராஜா ஆகியோர் முன்னின்று நடத்தினார்கள். இக்கருத்துப்பட்டறையில் கோத்தகிரி குன்னூர், உதகை பகுதிகளைச் சேர்ந்த இயற்கையின் இமைகள் குழுவினர் கலந்து கொண்டனர்.

## பழமரக் கன்றுகளை வளர்ப்பது பற்றிய கருத்தரங்கு

26-12-94 அன்று கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வீட்டுத்தோட்டத்தில் பழமரக் கன்று களை வளர்ப்பது எப்படி என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. மன்ற சுற்றுச் சூழல் பொறுப்பாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் 10 ஊரை சேர்ந்த 18 நபர்கள் கலந்து கொண்டனர்.

## கூடலூரில் சுற்றுச்சூழல் கருத்தரங்கு

நவ. 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் சுற்றுச் சூழல் கருத்தரங்கு கூடலூரில் மன்ற அலுவலகத்தில் நடை பெற்றது. இக்கருத்தரங்கில் மாவட்ட வன இலாக்கா அதிகாரி திரு.வரதராஜுலு மற்றும், பம்பாய் இயற்கை வரலாற்று பாதுகாப்பு சங்கத்தை சேர்ந்த திரு. ராஜகோபால், சி. பி. ராமசாமி ஐயர் சுற்றுச் சூழல் கல்வி மையத்தை சேர்ந்த திரு. குமாரவேல் ஆகியோர் கலந்து கொண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றிய வகுப்பு நடத்தினார்கள். இதில் வட்டாரச் செயலாளர் திரு செல்வராஜ் அவர்கள் வன வளம் அழிவிற்கு காரணம் பற்றியும், அவை அழி வதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். இக்கருத்தரங்கின் இறுதியில் கருத்தரங்கில் கலந்து கொண்ட, சுற்றுசூழல் பாது காப்பில் ஆர்வம் கொண்ட 35 நபர்களைக் கொண்ட 'இயற்கையின் இமைகள்'' என்ற சுற்றுச்சூழல் பாது காப்பு குழு அமைக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் 35 ஆண், பெண் கலந்து கொண்டனர்.

## மசினகுடி பஜாரில் உலக வனவிலங்கு பாதுகாப்பு விழா

நீலகிரி சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதிலும், இங்குள்ள வனங்களை பாதுகாப்பதிலும் மன்றம் தீவிரமாக பங்காற்றி வருகிறது. உலக வனவிலங்கு பாதுகாப்பு விழாவினையொட்டி மசினகுடி பஜாரில், பம்பாய் வரலாற்று பாதுகாப்பு மையமும் மன்றமும் இணைந்து சிறப்பான நிகழ்ச்சியினை நடத்தியது. இதில் மன்றத்தின் கலைக்குழுவினர் சார்பாக சுற்றுச் சூழல் தொடர்பான தெரு நாடகங் களும், ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணம் பல பாடல்களும் பாடப்பட்டன. அத்தோடு மன்றத்தின் எழுச்சி பாடல்களையும் விழிப்புணர்வு பாடல்களையும் மன்ற எழுச்சிப் பாடகர் திரு. வடிவேல் மாஸ்டர் அவர்கள் பாடி மக்களை மகிழ்வித்தார். இதில் 2,000 நபர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

* * *

## பஞ்சாயத்து சட்டங்கள் பற்றிய பயிற்சி கருத்தரங்கு

கடந்த நவம்பர் 29, 30 ஆகிய இருதினங்கள் கோத்தகிரி மன்ற வளாகத்தில் பஞ்சாயத்து சட்டங்கள் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது, இக்கருத்தரங் கிற்கு செங்கல்பட்டு சமூக செயல்பாட்டு சட்ட உதவி மையத்திலிருந்து வழக்குரைஞர்கள், திரு. மணிராஜ் திரு. ராஜேந்திரன், திரு. மைக்கல் ஆகியோர் வருகை புரிந்து பஞ்சாய்த்து சம்பந்தமான பல்வேறு சட்டங்கள் பற்றி எடுத்துரைத்தனர். உதகை, கோத்தகிரி பகுதியிலிருந்து 23 பேர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## நோயுற்றோருக்கு உதகை காசா காலனி மாதரணியின் உதவிகள்:-

உதகை காசாகாலணி மலையக மாதர் முன்னணி, கிளை நோயுற்றோருக்கு உதவி செய்து தம் தொண்டுள்ளத்தை வெளிப்படுத்தியுள்ளது. இக் காலனியில் டி. பி நோயால் பாதிக்கப்பட்டுள்ள திரு. செல்வம். சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப் பட்டுள்ள கிரேஸி ஆகியோருக்கு ரூ 500/- வீதமும் அரிசி கிலோ 25 வீதமும் வழங்கி பாதிக்கப்பட்டுள் ளோருக்கு தம் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

அத்தோடு சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக சென்னைக்கு செல்லவிருக்கும் திரு. நாச்சிமுத்துவின் மகனுக்கும் ரூ150/- உதவியுள்ளது.

## விடியல் வெகு தூரம் ...

சாராயம் விற்கும்
தரமான கவிதை நூல்
கீரை விலைக்கும்
கேட்கப்படுவதில்லை...!

கருவாடு விற்கும்
கருத்தான கதைநூல்
கத்திரிக்காய் விலைக்கும்
கருதப் படுவதில்லை...!

சுண்டக்காய் விற்கும்
துடிப்பான கட்டுரை நூல்
வெண்டைக்காய் விலைக்கும்
விரும்பப் படுவதில்லை...!

அவரைக்காய் விற்கும்
அறிவியல் புத்தகம்
சுவரேறி கெஞ்சினாலும்
தொட்டுப் பார்ப்பரோ...?

வீடியோ டேப்புகள்
விதவித சேவைகளை
தேடியே வந்துவாங்கிச்
சேர்ப்பார் வீட்டிலே...!

விசயமுள்ள புத்தகத்தை
வீடு தேடி கேட்டாலும்
இசைவுடனே வாங்க
எண்ணாது மறைந்திடுவார்...!

படிக்க முகஞ்சுளித்துப்
பதுங்கும் இனத்திற்கு
விடியல் வெகுதூரம்!
விசயமிதை என்றறிவார்...?

நன்றி- பயனீட்டாளர் குரல் (பினாங்கு) 1-1-1995

## கிடைக்கப் பெற்றோம்

### பயனீட்டாளர் குரல்

மலேசியாவில் உள்ள பினாங்கில் இருந்து 'பயனீட்டாளர் குரல்' என்ற தமிழ் பத்திரிக்கை ஆறு வருடங்களாக மாதந்தோரும் வெளிவருகிறது. மலேசியாவில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இது பயன் பல நல்கிவருகிறது. இதன் பொறுப்பாசிரியராக திரு. செ. மு. முகமது இதிரீஸ் அவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு துணையாக துடிப்பு மிக்க திரு. சுப்பாராவ் இருக்கிறார்கள். மலேசியாத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'பயனீட்டாளர் குரல்' ஆற்றி வரும் பணி மகத்தானது. குறிப்பாக நுகர்வோர் பாதுகாப்பிதழாக 'பயனீட்டாளர் குரல்' வெளிவரினும் நல்வாழ்க்கைக்கும் அறிவு பூர்வமாக பொருள்கள் வாங்கவும், வழிகாட்டுவதோடல்லாமல், கவர்ச்சிப் பொருட்களில் களங்கம் சேர்க்கும் வணிக வஞ்சகங்களையும் கூசாமல் அம்பலமாக்கும் துணிவு மிக்க மக்கள் தோழன் 'பயனீட்டாளர் குரல்' இவ்வாண்டின் முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம்.

## இந்திய வம்சாவழித் தமிழரும், இலங்கை அரசியலும்

இலங்கையில் பண்டாரவளையில் அருட்தந்தை ச. கீதபொன்கலன் அவர்கள் மலையக மக்களிடையே சமூகத் தொண்டாற்றி வருகிறார்கள், தீவிர சிந்தனையாளர், நல்ல எழுத்தாளர். இலங்கை அரசியலில் மலையக மக்களின் புறக்கணிப்பையும், போராட்டங்களையும், பரவி வரும் புதுக் கோலங்களையும் சிந்தனைத் தெளிவோடு விபரித்திருக்கிறார்கள். இந்நூல் ஜனவரி மாதம் சென்னையில் வெளியிடப் பட்டது.

## தெருவாழ் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்

நலிந்தோர் நல மையத்தின் குழந்தை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கோவை கவுண்டம்பாளையத்தில் டிசம்பர் 24 அன்று தெருவாழ் மற்றும் குழந்தை தொழிலாளர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை நலிந்தோர் நல மையத்தின் குழந்தை மேம்பாட்டுத் திட்ட அலுவலர் திரு. சி. ஜி. ஜேக்கப் ஏற்பாடு செய்தார்.

இக்கூட்டத்திற்கு தெருவில் வாழ்க்கை நடத்துகின்ற குழந்தைகள் சுமார் 12 பேரும் கல்வியை இடைநிறுத்தி வேலைக்கு செல்கின்ற குழந்தைகள் 18 பேரும் கலந்து கொண்டனர்.

அன்பையும், பாசத்தையும், குழந்தைகள் உரிமையையும் இழந்த இச்சிறுவர்களுக்கு நலிந்தோர் நல மையத்தின் ஆதரவையும், அரவணைப்பையும் அளிக்கும் வகையில் இவ ஒருங்கிணைப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்து இனிப்புகளும், உடைகளும் வழங்கப்பட்டது. ஜனநாயக தொழிலாளர் சங்கப் பொறுப்பாளர் திரு. ஜி. ராம்மோகன் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு உடைகளை வழங்கினார். மேலும் இக் குழந்தைகளிடம் காணும் தீய பழக்கங்களை களைய அவர்களுக்கு அவற்றின் தீமைகளை விளக்கி அறிவுரை வழங்கப்பட்டது. □

வெளியீடு : மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் இல, 14-56 கிளப் ரோடு, கோத்தகிரி, நீலகிரி-643 217,
தனிச்சுற்றுக்கு மட்டும்